[5th September 1959

SRI M. P. SUBRAMANIAM : ஸார், கிராமங்களில் வீடு கட்டிக்கொடுப்பதற்கும் திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. ரூரல் ஹௌஸிங் ஸ்கீமுக்கு மேல்குறிப்பிட்டிருந்ததிலிருந்து எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மிடில் இன்கம் க்ரூப் என்ற முறையில் அதாவது 500 ரூபாய்க்கு மேலாகவும் 1,000 ரூபாய்க்கு குறைவாகவும் இருக்கக்கூடியவர்களுக்கு இப்போது இருக்கின்ற திட்டத்தின் கீழ் உதவி செய்யப்பட்டு வருகிறது. ரூரல் ஹௌஸிங் ஸ்கீம்-மைப்பற்றி விவரமாக சொல்லுவதற்கு தனிக்கேள்வி போட வேண்டுகிறேன்.

SRI A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware that one of the members of the Investment Committee of the L.I.C. has resigned as a protest against its investment policy and if so, why should not the Government make a representation to the Union Government or the Life Insurance Corporation itself against the prejudicial treatment meted out to South India?

MR. SPEAKER : Life Insurance Corporation is a Government of India business.

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member has missed his place; he should have been in Parliament.

Provision of house-sites and drinking water wells for Harijans

*154 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம் ஆரணி தாலூகா, காட்டுகானூர், ரெட்டி பாளையம் கிராமங்களிலுள்ள ஹரிஜனங்கள், அருந்ததியர்கள், குறவர்கள் இவர்களிடமிருந்து 2-2-1959-ம் ஆண்டு பிப்ரவரி 2-ந் தேதியில் குடி தண்ணீர் கிணறு, வீட்டு மனைகள் வீடுகள் கட்ட கோரி மகசர்கள் வந்தனவா ?

(ஆ) அவைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Two petitions, one from the Harijans of Kattukanur Madura Reddipalayam in Arni taluk, North Arcot, requesting provision of house-sites and the other from the Arunthathiyars of the same village praying for provision of house-sites and drinking water well were received in February 1959.

(*b*) The petitions were communicated to the Collector of North Arcot for consideration and suitable action. The Collector is taking action on the requests of the petitioners.

SRI S. M. ANNAMALAI : ஸார், ஆரணி தாலூகாவில் ரெட்டியா பாளையத்தில் இருக்கின்ற புறம்போக்கு நிலங்களில் அங்குள்ள ஏழை ஹரிஜனங்கள் குடியிருந்தார்கள். அதன் பின்னால் சர்வே செய்து, அந்த சர்வேயர்களுக்கு அங்குள்ள ஜாதி இந்துக்கள் பணம் கொடுத்து அந்த புறம்போக்கு நிலங்களை எல்லாம் தங்கள் பக்கத்தில் வரும்படியாக ஆக்கிக் கொண்டார்கள். இதன் காரணமாக ஜாதி இந்துக்கள் அங்குள்ள ஏழை ஹரிஜனங்களை துன்புறுத்தி வருவதால் இந்த புறம்போக்கு நிலங்களை அதிலிருக்கின்ற ஹரிஜனங்களுக்கு உடனடியாக ஜாரி செய்து கொடுப்பதிற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

5th September 1959]

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் முதலில் கேட்டிருக்கும் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. தனியாக கேள்வி போட்டால் இதற்கு பதில் சொல்லலாம்.

Houses for Kallars

* 155 *Q.*—SRIMATHI A. S. PONNAMMAL : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

கள்ளர் ரெக்லமேஷன் வீடு கட்டும் திட்டத்தில் 1/15 பாகம் முன் பணம் கட்டவேண்டுமென்ற நியதியை மாற்றி ஹரிஜனங்களுக்குக் கொடுப்பது போன்று 1/15 பாகத்தையும் அரசாங்கமே கடனாகக் கொடுத்து உதவ உத்தேசமுண்டா ?

THE HON. SRI P. KAKKAN : Under the housing scheme for De-notified Tribes loans are being advanced even now in exceptional cases to equate the cost of contribution payable by the beneficiaries up to a maximum of Rs. 200 each, if they cannot meet it from their own resources.

SRIMATHI A. S. PONNAMMAL : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு சில இடங்களில் ஹரிஜனங்களை காட்டிலும் மோசமான நிலைமையில் கள்ளர் வகுப்பை சேர்ந்தவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கிற திட்டத்தைப் போன்று ஒரு திட்டத்தை கொண்டு வருவதற்கு அரசாங்கம் மறு பரிசீலனை செய்யுமா ? அதுமட்டுமல்ல இதற்காக ஒதுக்கப்படும் பணம் ஒவ்வொரு வருடமும் மிச்சப்படுவதாகவும் தெரிகிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இவர்களுக்கும் ஒரு திட்டத்தைக்கொண்டு வருவதற்கு முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : நான் சொன்ன பதிலிலும் இதைப் பற்றி குறிப்பிட்டேன். ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுவதற்கு என்று 200 ரூபாய் கடன் கொடுப்பது போன்று இவர்களுக்கும் கடனாக கொடுத்து உதவி செய்யலாம்.

Government Ophthalmic Hospital, Madras

* 156 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Advisory Committee of the Government Ophthalmic Hospital, Egmore, has recently requested the Government for the increase of hospital accommodation; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) Sufficient open space is not available within the compound of the Government Ophthalmic Hospital, Madras, for its expansion. The acquisition of a private property known as ' Shawfield '', situated near the hospital, has been sanctioned by the Government recently.

SRI A. A. RASHEED : What is the total accommodation in the hospital now? Is it a fact that a large number of persons suffering from eye defect are sent out for want of accommodation there?

THE HON. SRI M. A. MANICKAVELU : That is the reason why we have sanctioned acquisition of the neighbouring building; we could not expand the building in the present compound itself.